தொகுதி-9 எண் 1
Vol. 9 No. 1

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

மார்கழி 2051 - பங்குனி 2052
January - March 2021

ISSN : 2321-984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

*Published by*
**RAJA PUBLICATIONS**
No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.
Mobile : 9600535241
Website : www.rajapublications.com

27 பகுதி-2
Part -2

Scanned with CamScanner

# எஸ்.பொ.வின் நனவிடை தோய்தல் சித்திரிக்கும் பொருள்சார் பண்பாடு

முனைவர் ஞா. பெஸ்கி
இணைப்பேராசிரியர் & தமிழாய்வுத்துறைத்தலைவர், தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி, (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது), திருச்சிராப்பள்ளி-2, தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச்சுருக்கம்**

மனித சமூகத்தின் விடுதலையை முன்னிறுத்திக் கறுப்பியம், தலித்தியம், பெண்ணியம் போன்ற கோட்பாட்டுப் பின்னணியில் தடம்பதித்து வருகின்ற இலக்கியவரவுகளிடையே மற்றுமொரு எழுச்சியாக முகிழ்த்திருப்பதே புலம்பெயர்ந்தோர் இலக்கியம் என அழைக்கப்படுகின்ற புகலிட இலக்கியமாகும். தமிழிலக்கியப் பரப்பில் அரை நூற்றாண்டுக் காலத்திற்கும் மேலாக இலங்கையில் நிகழ்ந்து வருகின்ற இனமோதலினால் புலம்பெயர்ந்துள்ள ஈழத்தமிழர்களின் படைப்பாகவே இது அறியப்படுகிறது. இத்தகைய இலக்கியத் தளத்தில், சிங்களப் பேரினவாதத்தின் விளைவால் இலங்கையிலிருந்து ஆஸ்திரேலியாவிற்குப் புலம்பெயர்ந்தபோதிலும் தம் மண்ணின் அடையாளத்தையும் மறுக்கப்பட்ட உரிமைகளையும் மீட்டெடுக்கும் நோக்கில் கருத்தியல் மற்றும் களமாடல் நிலைகளில் செயல்பட்ட நற்போக்கு இலக்கியவாதியாக அறியப்படுபவர் எஸ்.பொன்னுத்துரை எனப்படும் எஸ்.பொ.ஆவார். புதினங்கள், சிறுகதைகள், காப்பியங்கள், உரைநடை நூல்கள், தொகுப்பு நூல்கள், நாடகங்கள், மொழிபெயர்ப்பு நூல்கள், பதிப்புத்துறை ஆகிய நிலைகளில் தன் பங்களிப்பை ஆற்றிவருகின்ற எஸ்.பொ.வின் புதிய இலக்கியப்படைப்பாக்க முயற்சியாக 'நனவிடை தோய்தல்' அமைந்துள்ளது. யாழ்ப்பாணத்து மக்களின் வாழ்வியலை வெளிப்படுத்தும் இந்நூலைப் பண்பாட்டு மானுடவியல் நோக்கில் ஆராய்வதாக இக்கட்டுரை முயல்கிறது. பண்பாட்டு வகைகளுள் ஒன்றாகக் கருதப்படுகின்ற பொருள்சார் பண்பாட்டின் கூறுகளை உணவு, உடை, உறைவிடம், புழங்குபொருள்கள் ஆகியவற்றின் அடிப்படையில் நனவிடை தோய்தல் எடுத்துரைக்கும் திறத்தை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**கலைச்சொற்கள்**

புலம்பெயர்ந்தோர் இலக்கியம், படைப்பாக்கக் கட்டுரைகள், நனவிடை தோய்தல், கதையாடல், பண்பாட்டுக்கூறு, பண்பாட்டுக் கலவை, நிறுவனம், புழங்குபொருள் பண்பாடு, பொருள் சார் பண்பாடு, பொருள் சாராப் பண்பாடு, கனவாய், ஒடியல் கூழ், தண்ணீர்ச்சோறு, மூக்குப்பேணி, நீத்துப்பெட்டி, உமல்கள், நனவுமனம், நனவிடை மனம், நனவிலி மனம்.

**முன்னுரை**

தமிழிலக்கியப் பரப்பிலே புலம்பெயர்ந்தோர் இலக்கியம் என்பது தன்வாழிடத்தை விட்டுத் தன்இருத்தலின் அச்சம் காரணமாகவும் வாழ்க்கை குறித்த எதிர்பார்ப்பினாலும் ஆஸ்திரேலியா, கனடா, நார்வே, டென்மார்க், சுவீட்சர்லாந்து, அமெரிக்கா, இங்கிலாந்து, இந்தியா போன்ற உலகநாடுகளைப் புகலிடமாகச் சென்று அடைந்துள்ள ஈழத்தமிழர்களின் இலக்கியப் பங்களிப்பை உறுதிசெய்கிறது. இத்தகைய படைப்பாளர்களுள் உலகளாவிய நிலைக்குத் தமிழிலக்கியத்தை உயர்த்தும் நோக்கில் முன்னோக்கு முயற்சிகளையும் புத்தாக்க நெறிகளையும் கையாண்டவராக எஸ்.பொ. அறியப்படுகிறார். அவரின் படைப்புகளுள் புதினமாக அறியப்படினும் வடிவத்தின் அடிப்படையில் 'படைப்பாக்கக் கட்டுரைகள்' என்னும் புதிய வகைமையாக அவரால் அறிமுகம்



Scanned with CamScanner

செய்யப்பெற்ற 'நனவிடை தோய்தல்' என்னும் நூலினைப் பண்பாட்டு மானுடவியல் நோக்கில் ஆராய்ந்து அவை வெளிப்படுத்தும் பொருள்சார் பண்பாட்டுக் கூறுகளை விளக்கியுரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

**எஸ்.பொ.வின் இலக்கியப் பங்களிப்பு**

ஈழத்துப் புதுமைப்பித்தன், ஈழத்து ஜெயகாந்தன் எனப் போற்றப்படுகிற எஸ்.பொ. என்னும் எஸ்.பொன்னுத்துரை உலகளவில் தமிழிலக்கியத்தை உயர்த்த விழைந்த ஆற்றல் மிகுந்த எழுத்தாளர் ஆவார். இதனை மு.தளையலிங்கம் **"பொன்னுத்துரை உலக இலக்கியத் தரத்தினைத் தொடுவதற்கு ஓடிக்கொண்டிருக்கும் ஓர் எழுத்தாளர்"**[1] என்று உறுதி செய்துள்ளார்.

எஸ்.பொ.வின் தமிழுக்கு வழங்கியுள்ள இலக்கியப்படைப்புகளைப் புதினங்கள், சிறுகதைகள், காப்பியங்கள், உரைநடை நூல்கள், தொகுப்பு நூல்கள், நாடகங்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்னும் ஏழு வகைகளுக்குள் பாகுபடுத்தமுடியும். எஸ்.பொ. எழுத்தாளராக மட்டுமின்றி 'மித்ர ஆர்ட்ஸ் அன் கிரியேஷன்ஸ்' என்ற நூல் வெளியீட்டகத்தைச் சென்னையில் நடத்தி இதன் வாயிலாகப் பதிப்பாளராகவும் பரிணமித்துள்ளார்.

பாலியல் நடத்தைகள் குறித்த தேடலாக அமைந்த 'தீ' யாழ்ப்பாணத்தின் ஆவணமாகத் திகழும் 'சடங்கு', உளவியல் சார் புதினமான 'தேடல்', கண்டி அரசின் வீழ்ச்சியைப் பதிவுசெய்துள்ள 'மணிமகுடம்', அரசியல் வரலாற்றுப் புதினமான மாயினி, கூட்டு முயற்சியில் வெளிவந்த மத்தாப்பு + சதுரங்கம், படைப்புக் கட்டுரை எனும் புதிய வகைமையில் வெளிவந்த 'நனவிடை தோய்தல்' ஆகியன இவர் படைத்த புதினங்களாகும். சுயமரபுத் தேடலிலே அமைந்த நாடகப் படைப்பாம் 'முறுவல், வரலாற்று நாடக நூலான 'வலை+ முள்', ஈழத்தமிழ் இனம் அடிமையான வரலாற்றையும் அதன் எதிர்வினையான போராட்ட எழுச்சியையும் சொல்லும் 'ஈடு' ஆகியன இவர் படைத்த நாடகநூல்களாகும்.

கவிதைபாடும் மரபை மாற்றி அமைக்கப்பெற்ற அப்பையா', மூன்று தலைமுறைகளை உள்ளடக்கிய சோகக் காவியமாம் 'அப்பாவும் மகனும்', பழம்நூல் ஒன்றினை உரையோடு பதிப்பிக்கும் அமைப்பினைக் கொண்ட ? ஆகியன இவரின் கவித்திறனுக்குச் சான்று பகர்கின்றன. காந்தியத்தைக் கதைப்பொருளாகக் கொண்ட காந்தியக் கதைகள், காந்தி தரிசனம், இலக்கியம் குறித்த கட்டுரைகள் அடங்கிய பெருங்காப்பியம் பத்து ஆகியன இவரால் தொகுக்கப் பெற்ற நூல்களாகும்.

சிறுகதை இலக்கியமுயற்சிகளை வெளிப்படுத்தும் 'வீ' பல்வேறு உறவுக்கதைகள், கற்பனைக் கதைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய 'பூ', தமிழர் தம் போலிவாழ்க்கையை வெளிப்படுத்தும் 'அவா', தமிழீழ விடுதலைப் போரில் உயிர் நீத்த தன்பிள்ளை அர்ச்சனா (மித்ர) பற்றிய 'ஆண்மை', பகவத்கீதையின் பின்புலத்தில் படைக்கப்பெற்ற 'கீதைநிழலில்' ஆகியன இவரின் சிறுகதைத் தொகுப்புகளாகும்.

கட்டுரைத் தொகுதியான 'எஸ்.பொ. அறிக்கை', இஸ்லாமிய தொண்டுகளை ஆவணப்படுத்தும் 'இஸ்லாமும் தமிழும்', மட்டக்களப்பு கே. சின்னத்துரையைப் பற்றி எழுதப்பட்ட 'நீலவாணன் நினைவுகள்', இலக்கியக் கட்டுரைகள் அடங்கிய 'இனி ஒரு விதி செய்வோம்', புதுவைப் பல்கலைக்கழகத்தில் புலம் பெயர்ந்தோர் இலக்கியம் பற்றி எஸ்.பொ. ஆற்றிய பேருரையின் தொகுப்பாம் 'பனிக்குள் நெருப்பு' ஆகியன இவரின் கட்டுரை நூல்களாகும். வரலாற்றில் வாழ்தல் என்னும் இவரின் தன்வரலாற்று நூல் ஈழத்தமிழர் வாழ்வை எடுத்தியம்பும் ஆவணமாக அமைந்துள்ளது.

மகாவம்சம், தேம்பி அழாதே பாப்பா, மக்களின் மனிதன், மானக்கேடு, கறுப்புக் குழந்தை, நித்திரையில் நடக்கும் நாடு, வண்ணத்துப் பூச்சி எரிகிறது போன்ற மொழிபெயர்ப்பு நூல்களையும் வழங்கியுள்ளார்.



Scanned with CamScanner

"சத்திய எழுத்தின் சரஸ்: விடுதலைவெறியே வெறியின் அம்சம் ஆவேசம் அடக்குமுறை அட்டூழியம், அக்கிரமம், அநியாயம், அதர்மம், அழிவு, எனப் புழுத்துப் போன ஊழல்களைக் கண்டு ஆவேசம் அவற்றிலிருந்து மனித விடுதலை சுகிக்க வேண்டும் என்ற வெறி சத்தியத்தினதும் தர்மத்தினதும் பரிபாலனம், விடுதலைக்கான உத்தரவாதம், இவையே மானுஷிகத்தின் ஆதாரம்"[2] என்னும் கொள்கையில் உறுதியாக நின்று, எஸ்.பொ. கலைநயத்துடன் பல்வேறு படைப்புகளை உருவாக்கியுள்ளார்.

புதிய வகைமையாய் 'நனவிடை தோய்தல்'

எஸ்.பொ.வின் படைப்புகளுள் நனவிடை தோய்தல் என்பது புதினமாக அறியப்பட்டாலும் எஸ்.பொ.வின் முன்னோக்கு முயற்சியான 'படைப்பாக்கக் கட்டுரைகள்' என்னும் புதிய வகைமையாக அறியப்படுகிறது. படைப்பாக்கக் கட்டுரைகள் என்னும் புதுவகை இலக்கியத்திற்குத் தமிழில் முதல் நூல் எஸ்.பொ.வின் நனவிடை தோய்தல் என்ற நூலாகும்.

"அவை கட்டுரைகளல்ல: கதைகளுமல்ல! creative essays என்ற வகையில் அவை அடங்கும் இந்தவித எழுத்துக்கள் தமிழில் ஊக்குவிக்கப்படாமல், தோன்றாமல் இருந்த ஒரு காலக்கட்டத்திலே நான் அதனைப் புலம்பெயர்ந்தோருடைய இலக்கியப்படைப்பின் நன்நிமித்தமாக அறிமுகப்படுத்தினேன் என்பது குறிப்பிடத்தக்கது"[3] என்று எஸ்.பொ. கூறியுள்ளார்.

'நனவிடை தோய்தல்' புதிய இலக்கியம் கட்டுரைக் கோவையா? இளமை நினைவுகள் மட்டுமா? நடைச்சத்திரங்களா? கதைகளா? வரலாற்று நூலா? இல்லை, இல்லை... பின் நிச்சயமாக புதிய இலக்கியம்"[4] என்று இந்நூலினைப் பற்றி எஸ்.பொ. குறிப்பிட்டுள்ளார்.

"நனவிடை தோய்தல்' என்ற நூலைப் படித்தேன். அது புதிய இலக்கிய முயற்சி. கால் நூற்றாண்டுக்கு முந்தைய யாழ்குடா நாட்டில் மண்ணின் வாசனையை 'எக்ஸ்ரே' படம் பிடித்துக் காட்டுவதாக இருந்தது. அதன் நடை புதிது, ஆக்கம் புதிது, நோக்கம் புதிது, அனுபவம் புதிது, இந்த முயற்சியில் எஸ்.பொ இலக்கிய உலகில் எங்கோ உயர்ந்துவிட்டார் என்றுதான் சொல்ல வேண்டும்"[5] என்று மாத்தளை கார்த்திகேசு குறிப்பிட்டுள்ளார்.

'நனவிடை தோய்தல்' என்ற நூலைப் பற்றி அ.முத்துலிங்கம் குறிப்பிடுகையில், "இது என்ன? கதையா? சுயசரிதையா? அல்லது கட்டுரையா? இது உண்மையில் ஒரு புது இலக்கியம். இலக்கணக்காரர்கள் அவசரம் அவசரமாக, ஒரு புது இலக்கணம் இதற்குச் செய்ய வேண்டியது தான். பாற்கடலில் கண்டெடுத்த முத்துக்கள் போல எல்லாமே முத்தான கதைகள். படிக்க படிக்க ஆவலைத் தூண்டும் முத்தான படைப்புகள்"[6] என்கிறார்.

நனவோடை நிலை என்னும் தொடரானது. வில்லியம் ஜேம்ஸின் 'உளவியல் கொள்கைகள் (1890) என்னும் நூலில், "மனதில் உதிக்கின்ற கருத்தாக்கங்கள், நினைவுகள், சிந்தனைகள், மற்றும் உணர்வுகள் ஆகியவற்றை சிதறுண்ட நிலையில் விவரிக்கின்றதாகக் கையாளப் பெற்றது. இது நவீனப் புதினங்களில் கதையாடல் முறையை விவரிக்கின்றதாகத் தற்போது கையாளப்படுகிறது."[7]. மனத்தினை நனவுமனம் (Conscious mind), நனவிடை மனம் (Sub-Conscious mind), நனவிலி மனம் (Unconscious mind)என்று வகைப்படுத்தும் உளவியல் மனிதனின் அமுக்கப்பட்ட நினைவுகள் தூண்டுதலுக்கு உள்ளாகும்போது துலங்குகின்ற பகுதியாக நனவிடை மனத்தை வரையறுக்கிறது. அவ்வகையில் புகலிடச் சூழலில் புதையுண்டு போன தாய்நாட்டைக் குறித்த நினைவேக்கங்களை மீட்டெடுக்கும் நோக்கில் படைக்கப்பட்டுள்ள இப்படைப்பு 'நனவிடை தோய்தல்' என்னும் பெயரைப் பெற்றுள்ளது.

'நனவிடை தோய்தல்' பல ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாண மக்கள் நடந்த தெருக்கள்,



Scanned with CamScanner

வசித்த இடங்கள், கோயில்கள், குளங்கள், உணவுகள் போற்றிய நம்பிக்கைகள், சமூகக் குழுக்கள், விளையாட்டுக்கள் போன்றவற்றைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ள போதிலும் பண்பாட்டு மானுடவியல் முன்வைக்கும் பொருள் சார் பண்பாட்டுக் கூறுகள் மட்டும் இங்கு ஆராயப்படுகின்றன.

பொருள்சார் பண்பாடு

"பண்பாடு என்பது ஒரு சமூகக் குழுவுக்குள் தலைமுறை தலைமுறையாகப் பின்பற்றப்பட்டு வரும் எண்ணங்கள், விழுமியங்கள் (values), அறிவு ஆகியவற்றின் தொகுமொத்த அமைப்பைக் குறிப்பதாகும். இச்சொல் சில சமயங்களில் விதிமுறைகள் அல்லது கட்டுப்பாடுகளின் (obligations) ஒழுங்கு முறைமையையும் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகின்றது. சில சமயங்களில் கருத்துப் புலப்பாட்டு வகைமையை அல்லது வெளிப்பாட்டு முறைமையைக் (எடுத்துக்காட்டு, கலைகள்) குறிப்பிடப் பயன்படுத்தப் பெறுகின்றது"[8] என்று சி.இ. மறைமலை சுட்டிக்காட்டியுள்ளார்.

பண்பாடு என்பதும் பல கூறுகள் ஒருங்கிணைந்த நிலையில் செயற்படுவதாகும். இதன்கண் உள்ள உட்கூறுகளை மூன்று வகையாகப் பாகுபடுத்தலாம். அவை பண்பாட்டுக் கூறு (cultural trait), பண்பாட்டுக் கலவை (culture complex), நிறுவனம் (institution) எனப்படும். பண்பாட்டுக் கூறை மானிடவியலாளர்கள் இரண்டு வகையாகப் பிரித்துக் காண்கின்றனர். பொருள்சார் பண்பாடு (Material culture) என்றும், பொருள் சாராப் பண்பாடு (Non-material Culture) என்றும் இரு வகைகளாகப் பிரிக்கின்றார்.

"நாட்டார் வாழ்வியலில் பொருள்சார் பண்பாடு அல்லது புழங்கு பொருளால் அறியப்படும் பண்பாடு என்பது நாட்டார் நடத்தைகளுக்குள் காணப்படும். பார்வைப்புல (கட்புல) வழக்காறுகளாகும். அவை பரம்பரையினருக்கிடையே, பரிமாறிப் பரப்பப்படும் உத்திகள், திறமைகள், வாய்பாடுகள் போன்ற தாக்கங்களுக்கு உட்படுகின்றன"[9] எனத் தே. லூர்து கூறுகிறார். இத்தகைய பொருள்சார் பண்பாட்டினுள் உணவு, உடை, உறைவிடம், புழங்குபொருள்கள் ஆகியன மட்டும் நனவிடை தோய்தல் வழி இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றன.

உணவுசார் பண்பாடு

ஈழத்தமிழரின் அசைவ உணவுகளாக கோழிக்கறி, உடும்பு இறைச்சி, மான் இறைச்சி, ஆட்டிறைச்சி, ஆமைக்கொழுப்பு ஆகியவை சுட்டப்படுகின்றன.

ஈழத்தமிழர் கோழிக்கறியில் மிளகாய்த்தூள் போடாமல் வெள்ளைக்கறியாகத் தேங்காய்ப்பால் சேர்த்துச் சமைத்தனர் என்பதையும் யாழ்ப்பாணத்தில் இருந்த பெரிய மீன்கடைகளுள் விற்பனையாளர்களாகப் பெரும்பாலும் பெண்களே இருந்துள்ளனர் என்பதையும் மீன்கறிக்கு மரவள்ளிகிழங்கு மசியல் மிகவும் சிறந்ததாக இருந்துள்ளது என்பதையும் எஸ்.பொ. சுட்டியுள்ளார். மேலும் முட்டைக் கணவாய் பிரட்டல் மிகவும் சுவையான ஒன்றாக அவர்களின் உணவுநடைமுறையில் இருந்துள்ளது. கணவாய் என்பது கட்டில்ஃபிஷ் (Cuttle fish) என்றழைக்கப்படும் ஒரு கடல்வாழ் உயிரினமாகும். இது ஒரு மெல்லுடலி வகையைச் சேர்ந்தது.

மாதத்துக்கொரு முறையாவது சிலர் கூட்டுச் சேர்ந்து கிடாய் பங்குப் இறைச்சியை உண்டு மகிழ்ந்துள்ளனர் என்றும் அந்தக்கறியின் வாசனை ஒரு மைலுக்கப்பாலும் மூக்கைத் துளைக்கும் என்று எஸ்.பொ. நினைவுகூர்ந்துள்ளார். அவ்வாறே கொழும்பு உணவகங்களில் இடியாப்ப பிரியாணி இருந்துள்ளதையும் பதிவுசெய்துள்ளார். யாழ்ப்பாணத்தின் தேசிய உணவாக ஒடியல் கூழை எஸ்.பொ. குறிப்பிட்டுள்ளார். பச்சை பனங்கிழங்கைப் பிளந்து காய வைத்து அதன்பின் உரலிலே இடித்து மாவாக்கிக் காய்ச்சப்படும் கூழ் ஒடியல் கூழ் எனப்படுகிறது.



Scanned with CamScanner

எஸ்.பொ. இந்நூலில் அந்தக் காலத்து யாழ்ப்பாணக் கலாசாரத்தைப் பழஞ்சோத்துக் கலாச்சாரம் என்று கூறுவார்கள். "பெரும்பாலும், சனிக்கிழமை காலமை குழையல் நடக்கும் சோற்றுப் பானைக்குள், இரவு தண்ணீர் ஊற்றப்படும். இரவு முழுவதும் தண்ணீரில் ஊறிய சோறு ஒரு கணக்கான நொதிப்பு நிலை அடைந்திருக்கும் அதில் ஊறிய தண்ணீரை முற்றாக பிழியாமல், பக்குவமாய் வடித்தெடுத்து, ஒரு பெரிய சட்டியிலே போட்டு, மிச்சம் கிடக்கும் எல்லாக் கறிகளையும் கொட்டி, ஆச்சி குழையலைப் பிசைந்தெடுப்பார்"(பக்.216-217.). மட்டக்களப்பில் பழைய சோற்றினைத் 'தண்ணீச்சோறு' என்று அழைத்துள்ளனர்.

ஆனால் புலம்பெயர்ந்து வாழும் சூழலில் தம் ஈழத்து உணவைப் புகலிடத்தில் பயன்படுத்தியதை,"அவிச்ச கிழங்குக்கும் சுட்டக் கிழங்குக்கும் உப்பும் மிளகும் தான் ஏற்ற உவப்பு. அவித்த கிழங்கைப் பிளந்து காய விடுவார்கள். அவ்வாறு காய்ந்த கிழங்கு 'புழுக் கொடியல்' எனப்படும். 'புழுக்கொடியல் பக்கற் செய்யப்பட்டு தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் கிடைக்கின்றது. இப்ப அவுஸ்ரேலியாவில் ஒரு தவனம் வந்தால் 'புழுக்கொடியல்' வாங்கிச் சாப்பிடுறனான்." (ப.300) என்று பதிவு செய்துள்ளார். ஈழத்தமிழர்கள் இடியாப்ப பிரியாணி, பழையசோறு, தோசைகள், இடியாப்பம், அப்பம், புட்டு, புழுங்கஞ்சி, மரக்கறி ஆகியவற்றைச் சைவஉணவுகளாக உண்டனர் என்பதையும் எஸ்.பொ. பதிவு செய்துள்ளார்.

### உடைசார் பண்பாடு

இந்தியத் தமிழர்கள் உடுத்துகின்ற ஆடைகளின் தாக்கமே ஈழத்தமிழர் வாழ்விலும் செல்வாக்கு பெற்றிருந்தது. சேலை, சோளி, வேட்டி, பனியன், கோட், டை, சில்க்துணி, பட்டுக்கழிஞ்சான், பள்ளிச்சீருடை, சால்வை, ராஜபாட் என்ற மேலங்கி போன்ற ஆடைகளின் பயன்பாட்டைத் தம் படைப்புகளில் எஸ்.பொ. சித்திரித்துள்ளார். இத்தகைய நிலையில் பட்டுத்துணி பற்றிய பயன்பாடு நனவிடை தோய்தலில் சித்திரிக்கப்பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்தில் சீனர்கள் விற்பனை செய்த பட்டுத்துணிகளை ஈழத்தமிழர்கள் பயன்படுத்தியுள்ளனர் என்பதை, "வகை வகையான சிலுக்குத்துணிகளை, அம்மா விரித்துப்போட்ட பாயிலே பரப்பி வைத்தான். எல்லாமே சீனாவில் செய்யப்பட்ட பட்டுத் துணிகள் அந்தக் காலத்திலே அபூர்வமான சிலுக்குத் துணிகளை விற்பவர் சீனர்களே என்ற கியாதி இருந்தது" (பக்.42-43) என்று எஸ்.பொ. பதிவு செய்துள்ளார். ஆனால் புகலிடத்தில் எவரையும் அவர்தம் ஆடைகளைக் கொண்டு அடையாளம் காணமுடியாது என்பதையும் எஸ்.பொ. குறிப்பிட்டுள்ளார்.

### உறைவிடம்சார் பண்பாடு

ஈழத்தமிழர்களின் உறைவிடங்களாக மாளிகை வீடு, குடிசைவீடு, நவீனக்குடியிருப்பு, ஓலைக்கூரைவீடு, கொட்டில், மாடிவீடு, போன்றவை அமைந்துள்ளதை எஸ்.பொ. படைப்புகள் சித்திரிக்கின்றன..ஈழத்து மக்கள் மாடிவீடுகள் கட்டியும் வாழ்ந்துள்ளனர் என்பதை நனவிடை தோய்தலில், "காளி கோயிலுக்கு கிழக்கு விலாவில் அந்த அயலிலேயே முதலாவது மாடிவீடு கட்டியவர் 'சாந்தா' செல்லத்துரை" (ப.151) என்ற வரிகளின் வாயிலாக அறிய முடிகின்றது.

### புழங்குபொருள் பண்பாடு

மேலும் ஈழத்தமிழர் வாழ்க்கையில் செல்வாக்கு பெற்றுள்ள புழங்குபொருள்களுள் தனித்துவமான பொருள்களின் பயன்பாட்டினை நனவிடை தோய்தல் சிறப்பாகப் பதிவு செய்துள்ளது. அவற்றுள் மூக்குப்பேணி, நீத்துப்பெட்டி, உமல்கள் ஆகியன குறிப்பிடத்தக்கவை.

மூக்குப்பேணி என்பது குடிப்பதற்கு ஏற்ப மூக்குப் போன்ற வடிவுடைய வாயைக் கொண்டதாக வடிவமைக்கப்பெற்றுள்ள கலனாகும்.. இது இலங்கையில் இன்றும்



Scanned with CamScanner

அன்றாடப் பயன்பாட்டில் இருக்கும் ஒரு புழங்குபொருள் ஆகும். இது பொதுவாக செம்பில் செய்யப்பெற்றிருக்கும். வாயின் தூய்மையைப் பேணுதல், தேவையான அளவுக்கு நீர்மங்களைப் பருகுதல் போன்றவற்றுக்கு ஏற்ப அமைக்கப்பெற்றுள்ளது.

எஸ். பொ. தன்னுடைய படைப்புகளில் கையாண்டுள்ள உணவுசார்ந்த புழங்கு பொருளாக மூக்குப்பேணி இருந்ததை என்பதை, "அந்தக் காலத்தில் வீடுகள் தோறும், தேநீர்க் கடைகள் தோறும், விருந்துகள் தோறும் மூக்குப் பேணிகள் சர்வ வியாபகமாக இருந்தன" (ப.268) என்பதின் மூலம் அறிய முடிகின்றது. நீத்துப்பெட்டியை ஈழத்தமிழர் உணவு சமைக்கப் பயன்படுத்தியுள்ளதை, "அம்மா நீத்துப் பெட்டியில் அவிக்கும் அந்தப் புட்டு பட்டென்று நினைவுக்கு வரும்" (ப.120) என்னும் நனவிடை தோய்தல் வரிகள் மெய்ப்பிக்கின்றன. நீத்துப்பெட்டி என்பது, மாவு, பிட்டு போன்றவற்றை அவிக்கப் பயன்படும் பனை ஓலையால் ஆன கூம்பு வடிவச் சாதனம் ஆகும்.

பனையோலையால் பின்னப்பட்ட பையான உமல் என்பதையும் எஸ்.பொ. பதிவுசெய்துள்ளார். உமல்கள் பெட்டிகளாகப் பயன்படுத்தப்பட்டு உள்ளன. "பெட்டிகளிலேதான் எத்தனை வகைகள்? குஞ்சுப் பெட்டி, அடுக்குப் பெட்டி, மூடற்பெட்டி சாமான்கள் செய்வதற்கு உமல்களும் வசதியானவை. பெரிய கடை மீன் சந்தைக்கு முன்னால், ஒரு காலத்தில் ஒரு சேத்துக்கு விற்கப்பட்ட கறி உமல் துவக்கம், பல அளவுகளிலும் உமல்கள் கிடைத்தன. சில உமல்கள் கெட்டியாக இழைக்கப்பட்டிருக்கும்" (ப.220) என்று நனவிடை தோய்தலில் சித்திரிக்கப் பெற்றுள்ளது. அவ்வாறே எழுத்துக்களை எழுதுவதற்குப் பயன்படும் பலகை எழுதுபலகையை நனவிடை தோய்தலில் காணமுடிகிறது. இதனை, "தண்ணீரால் சிலேட்டைக் கழுவி, அதன் சட்டத்தைப் பிடித்து ஆட்டி ஆட்டி உணர்த்தினான். சட்டம் கழன்று, சிலேட் சிமெண்டுத் தரையில் விழுந்து நொறுங்கிப் போச்சு" (ப.133) என்னும் வரிகள் உறுதிபடுத்துகின்றன. அவ்வாறே பண்டைக் காலத்தில் கிராமபோன் பெட்டி பயன்பாட்டில் இருந்ததை நனவிடை தோய்தல் வெளிப்படுத்தியுள்ளது. "ராசா அண்ணர் சடங்கு வீடுகளுக்கு கிராமபோன் பெட்டி கொண்டு வந்தால், பாகவதர் பாடிய தட்டுகளை மறக்காமல் கொண்டு வருவார்" (ப.167) என்று சடங்கு வீட்டில் பாகவதர் பாடிய பாடல்களைக் கேட்பதற்கு கிராம போன் பெட்டி பயன்படுத்தப்பட்டுள்ளதை எஸ்.பொ. குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு யாழ்ப்பாணத்து வாழ்வியலைப் புலம்பெயர் சூழலில் நினைவுகூருவதாக இப்படைப்பு அமைந்துள்ளது.

## தொகுப்புரை

காலப்போக்கில் அமிழ்ந்துபோன மனஉணர்வுகளைத் தூண்டுதலால் துலங்கச் செய்யும் களமாக நனவிடை மனத்தை உளவியல் வரையறுக்கிறது. எனவே உள்ளத்து உணர்வுகளைச் சிதறுண்ட நிலையில் எடுத்துரைக்கின்ற கதையாடலைக் கொண்டதாகவே எஸ்.பொ. நனவிடை தோய்தல் என்னும் நூலைப் படைத்துள்ளார். படைப்பாக்கக் கட்டுரைகள் என்னும் புதிய இலக்கிய வகைமையை அறிமுகப்படுத்தும் சோதனை முயற்சியாக இந்நூல் படைக்கப்பட்டுள்ள போதிலும் நனவிடை மனத்தில் புதைந்து கிடக்கின்ற யாழ்ப்பாணத்து வாழ்வியலை மீட்டெடுக்கும் முயற்சியாகவே இது அமைந்துள்ளது. உணவு, உடை, உறைவிடம், புழங்குபொருள்கள் ஆகிய பொருள்சார் பண்பாட்டுக் கூறுகளை எஸ்.பொ. நினைவுகூருவதாக இப்படைப்பு அமைந்துள்ளது. தனிமனித உணர்வுநிலையில், தான் வாழ்ந்த சமூகத்தை அடையாளப்படுத்தும் தன்வரலாற்றுக் கூறுகளைக் கொண்டு அமைந்துள்ளதால்- மறுக்கப்பட்ட தன் அடையாளத்தை மீட்டெடுத்தல் என்னும் விளிம்புநிலை இலக்கியங்களின் செல்நெறியை 'நனவிடை தோய்தல்' நிறைவு செய்துள்ளது என்றால் அது மிகையில்லை.



Scanned with CamScanner

**சான்றெண் விளக்கம்**

1. ஞானசேகரன்(க.ஆ.),ஞானம்(கலை இலக்கிய சஞ்சிகை),கொழும்பு, 2009, ப. 2.
2. இந்திரன், ப.தி.அரசு(தொகு.) எஸ்.பொ: ஒரு பன்முகப் பார்வை, ப.71
3. எஸ்.பொ., தீதும் நன்றும், ப.110
4. எஸ்.பொ., நனவிடை தோய்தல், ப.xiv.
5. மாத்தளை கார்த்திகேசு(க.ஆ.),ஞானம்(கலை இலக்கிய சஞ்சிகை),கொழும்பு, 2009,ப.69.
6. இந்திரன், ப.தி. அரசு. (தொகு.), மு.நூ., ப.164.
7. M.A.Abrahams., A Glossary of Literary terms,P.307.
8. சி. இ. மறைமலை, இலக்கியமும் சமூகவியலும், ப.94.
9. தே.லூர்து, நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், ப.47.

**துணைநூற்பட்டியல்**


1. இந்திரன், ப.தி.அரசு, (தொகு.), எஸ்.பொ: ஒரு பன்முகப் பார்வை, மித்ர ஆர்ட்ஸ் & கிரியேஷன்ஸ், சென்னை, முதற்பதிப்பு, 2003.
2. எஸ்.பொ., தீதும் நன்றும், மித்ர ஆர்ட்ஸ் & கிரியேஷன்ஸ், சென்னை, முதற்பதிப்பு, 2007
3. எஸ்.பொ., நனவிடை தோய்தல், மித்ர ஆர்ட்ஸ் & கிரியேஷன்ஸ்,சென்னை - 94, முதற்பதிப்பு, 2003.
4. மறைமலை.சி.இ., இலக்கியமும் சமூகவியலும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 1991.
5. லூர்து. தே., நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை, இரண்டாம் பதிப்பு,2000.
6. Abrahams. M.H., A Glossary of Literary terms, Akass press, NewDelhi, 2005
7. ஞானம்(கலை இலக்கிய சஞ்சிகை), கொழும்பு, 2009


൙



Scanned with CamScanner

தொகுதி-9 எண் 1

**Vol. 9 No. 1**

**மார்கழி 2051 - பங்குனி 2052**

**January - March 2021**

**ISSN : 2321 - 984X**


| | | | |
|---|---|---|---|
| 51. | ப. கோபிகிருஷ்ணன் | புலச்சொல் கூறுகள் | 329-332 |
| 52. | P. SADASIVAM & M.R. RAJKUMAR | IMPACT OF EDUCATIONAL WELFARE SCHEMES ON EMPOWERMENT OF DALITS IN TAMIL NADU (1991-2011) | 333-339 |
| 53. | ப. ராஜேஸ்வரி & சே. தெய்வக்கன்னி | ஆழ்வார் பாசுரங்களில் திருமால் அவதாரங்கள் | 340-345 |
| 54. | JIJA, M.B., | AXIAL DIMENSION OF LOCATIVES IN MALAYALAM | 346-356 |
| 55. | நா. இரமேசு & பெ. கண்ணன் | சங்க அகப்பாடல்களில் தோழி | 357-364 |
| 56. | ரா. கலைவாணி | தற்காலக் கவிதைகளின் நோக்கும் போக்கும் | 365-369 |
| 57. | கு. கங்காதரன் & பு. ஜார்ஜ் | உமாதேவி பாடல்களில் பயின்று வரும் பண்பாட்டுக் கூறுகள் | 370-373 |
| 58. | S. SIVAKUMAR | GROWTH AND DEVELOPMENT OF SAIVISM IN TAMIL NADU | 374-377 |
| 59. | பா. கிருஷ்ணமூர்த்தி & மு. பாண்டி | புதுக்கவிதைகளில் புலப்பாட்டு உத்திகள் | 378-385 |
| 60. | K. THANGARAJ & C. SELVARAJ | FAIRS AND FESTIVALS IN CHETTINAD | 386-393 |
| 61. | இல. மேனகா & பெ. கண்ணன் | சி.எம். முத்துவின் படைப்புகளில் உழவும், வேளாண்மையும் | 394-399 |
| 62. | சே. மேரி & து. மேஷாக் | தமிழ்க் கிறித்தவ நாடகங்கள் காட்டும் இறையாட்சியும் இவ்வுலக ஆட்சியும் | 400-404 |
| 63. | ஞா. பெஸ்கி | எஸ்.பொ.வின் நனவிடை தோய்தல் சித்திரிக்கும் பொருள்சார் பண்பாடு | 405-411 |
| 64. | இரா. முரளி கிருட்டினன் | முல்லைத் திணையில் காணலாகும் இல்லறநெறி | 412-416 |
| 65. | எஸ். ஸ்ரீதர் & க. இக்பால் | திருமங்கையாழ்வாரும் மற்றைய ஆழ்வார்களும் | 417-426 |
| 66. | J. SASIKALA | HISTORY OF POLITICAL PARTICIPATION OF WOMEN IN INDIA | 427-433 |
| 67. | P. SANKAR | STATUS OF WOMEN THROUGH AGES | 434-440 |
| 68. | மு. பாரதி | புறநானூறு காட்டும் இல்லற நெறி | 441-444 |
| 69. | AJITH R PILLAI & P. SETHURAJAKUMAR | PARENTING AND JOB-RELATED STRESS AMONG EMPLOYED MOTHERS OF ADOLESCENTS- A SOCIOLOGICAL ANALYSIS | 445-450 |
| 70. | NAGAVENI. E & D. THIRUMALRAJA | SOCIAL WELL-BEING FOR THE PERSON WITH A DISABILITY IN INDIA: THE ESSENTIAL FOR AN INCLUSIVE REDRESSAL MECHANISM | 451-459 |
| 71. | மு.செந்தில்குமார் | தாய்மொழி பற்றில் கலைஞர் மு.கருணாநிதியின் பங்கு | 460-466 |
| 72. | வெ. திருவேணி | கார்நாற்பது காட்டும் தலைவியின் மாண்பு | 467-473 |
| 73. | அ. தௌ.'.பீக் ரமீஸ் | யுவன் சந்திரசேகரின் கவிதை மொழிபெயர்ப்புத் திறன் | 474-481 |
| 74. | கு. விமலாரமணி & தே. இந்திரகுமாரி | ஒப்பீட்டு நோக்கில் பெண்ணிய சிந்தனைகள் | 482-488 |
| 75. | இரா. இராஜா & ம. இளையராஜா | சு. சமுத்திரம் நாவல்களில் பெண்ணிய விழுமியங்கள் | 489-492 |
| 76. | எம். பானுமதி | குறிஞ்சித்திணைப் பாடல்களில் விலங்குகள் | 493-501 |
| 77. | S. உமா கௌரி & சுனிதா | ஊத்துக்காடு வெங்கட சுப்பையரால் பாடப் பெற்ற தெய்வங்கள் மற்றும் ஸ்ரீமத் பாகவதபுராண இசை நாடகப் பாடல்கள் | 502-511 |
| 78. | வெ. கலைச்செல்வி & இரா. அருள்மொழி | மூவர் பதிகத்தில் இடம்பெறும் புராண வரலாற்றுக் குறிப்புகள் | 512-516 |
| 79. | வே.தா. தர்மராஜா | கவிஞர் மித்ரா கவிதைகளில் அறிவியல் சிந்தனைகள் | 517-524 |
| 80. | பெ. சுமதி | சிறுகதைகளில் பெண்கள் ஒடுக்கப்படும் நிலை | 525-534 |
| 81. | ஆர். சரவணன் & நீல. மாதவன் | அறநூல்களில் சமுதாயச் சிந்தனைகள் | 535-543 |
| 82. | சா. அனி கரோலின் & ஆ. விஜயலெட்சுமி | சுஜாதாவின் கணினி அறிவியல் குறித்த ஆளுமை | 544-549 |
| 83. | ஸ்ரீ. அழகுலெட்சுமி & இரா. பழனிச்சாமி | திலகவதியின் புதினங்களில் குடும்பச் சிக்கல்கள் | 550-554 |
| 84. | P. பிரேம்குமார் & D. ஆக்னஸ் ஷர்மிலி | இசை வளர்ச்சியில் எண்மவியல் ஒலிப்பதிவுக் கூடத்தின் பங்களிப்பு | 555-559 |
| 85. | கா. இரவிச்சந்திரன் | கிரதார்ஜு*னியம் : சிற்பம், காவியம், தெருக்கூத்து | 560-565 |
| 86. | மு. ஜோதி & டே. கிறிஸ்துமணி | சங்க இலக்கிய நோக்கில் மருதநில மக்கள் | 566-570 |
| 87. | இரா. அருணா | அணி இலக்கணம் கற்றல்-கற்பித்தலில் திரையிசைப்பாடல்களின் பங்கு | 571-575 |
| 88. | K. SARANYA & V. VIJAYARANGAM | THE IMPORTANT JAIN PILGRIMAGE CENTRES OF TOURIST INTEREST IN VILLUPURAM DISTRICT | 576-581 |
| 89. | Md. CHINGIZ KHAN& Md. BAHARUDDIN SHAH | AN ASSESSMENT OF REPRESENTATION AMONG *PANGAL* IN MANIPUR: FROM GENDER DISPARITY PERSPECTIVE | 582-592 |
| 90. | TRILOCHAN KUMAR & PARIKSHAT SINGHMANHAS | CROSS-CULTURAL DIVERSITY IN TOURISM BUSINESS OPERATIONS: FINDING SPACE FOR STRATEGIC PARTNERSHIP AMONGST THE NATIONS (INDIA-EU). | 593-606 |
| 91. | மா. செல்வகுமார் | தமிழ் இலக்கியத்தில் நிலமும் மேலாண்மையும் | 607-610 |
| 92. | பொ. தீபா | இரட்சணிய யாத்திரிகத்தில் சிலுவைப்பாடுகள் | 611-615 |
| 93. | பா.விஜய சோபியா & கோ. கோதண்டராமன் | எஸ். ராமகிருஷ்ணனின் யாமம் புதினத்தில் கனவு மனம் | 616-620 |
| 94. | M. JEBAKUMAR & V. SUNDARARAMAN | DIFFUSION OF DIGITAL INDIA PROGRAMS AMONG YOUTH IN TAMIL NADU: OPPORTUNITIES AND CHALLENGES | 621-627 |
| 95. | க. இக்பால் | ஐங்குறுநூறு செவிலிக் கூற்றுப் பத்து கூறும் தாய்-தந்தை-சேய் உறவு நிலைகள்" | 628-633 |
| 96. | M. EVANGELIN & V. SUNDARARAMAN | A STUDY OF SEMIOTIC ANALYSIS OF REALITY SHOW [SOLLUVATHU YELLAM UNMAI] | 634-638 |
| 97. | J. THAMARAI SELVI & C. VISWANATHAN | IMPACT OF SIMPLIFIED KUNDALINI YOGA ON MENTAL WELLBEING | 639-646 |
| 98. | செ. ரவிசங்கர் | ஒப்பீட்டு நோக்கில் பொருள்கோள் கோட்பாடு | 647-652 |
| 99. | P.SIVARAMAN&Y.SUNITHA | WHY MALE DOMINANCE IN KATHAKALI | 653-657 |
| 100. | அ.ல.மகேஷ்குமார் & ப. நடராஜன் | மிருதங்க பாணிகள் ஓர் ஆய்வு | 658-662 |


Published by : **Raja Publications,** No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241

Printed : **The Printing House,** Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

Scanned with CamScanner